பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 05 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. உலகின் முதலாவது OptoSAR செயற்கைக்கோளான Drishti விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. அரசியல் சாசன அமைப்புகளின் மாண்பை குலைக்கும் வகையில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

3. ஆதார் அட்டைகளில் விரைவில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. கம்போடியாவுடனான கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்கான இந்திய குழுவினர் அந்நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

உலகின் முதலாவது OptoSAR செயற்கைக்கோளான Drishti விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில், நமது விண்வெளி பயணத்தில் மிகப்பெரிய சாதனை இது என்று குறிப்பிட்டுள்ளார்.

நமது இளையோரின் புதுமை கண்டுபிடிப்புகளின் வலிமைக்கு எடுத்துக்காட்டாக இது திகழ்கிறது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனமான GALAX-EYE வடிவமைத்துள்ள இந்த செயற்கைக்கோள், அமெரிக்காவின் கலிஃபோர்னியாவிலிருந்து FALCON-9 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

>>>>>><<<<<

மேற்குவங்கம், தமிழகம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

*இதற்காக, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*மேற்குவங்கத்தில் 293 தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி, 77 மையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த மையங்களில் 200 கம்பெனிகளின் மத்தியப் படையினர், பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.*

*முதல்முறையாக காவல் பார்வையாளர்கள் இப்பணியை கண்காணிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்,*

*தமிழகத்தில் உள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.*

*கேரளத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*அஸ்ஸாமில் 40 வாக்கு எண்ணும் மையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*புதுச்சேரியில் வாக்கு எண்ணும் பணிகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் கூறியுள்ளார்.*

*தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள் வாக்கு எண்ணும் பணியை கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.*

*இந்த மையங்களில் வாக்கு எண்ணும் பணி, காலை 8 மணிக்கு தொடங்குகிறது.*

*முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும் என்றும், எட்டரை மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*இதேபோல், கர்நாடகாவின் Bagalkot, தெற்கு Davanagere, நாகாலாந்தின் Koridang, திரிபுராவின் Dharmanagar, குஜராதின் Umreth, மற்றும் மஹாராஷ்ட்ராவின் Rahuri, Baramati ஆகிய*

சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் நாளை எண்ணப்படுகின்றன.

>>>>>><<<<<

அரசியல் சாசன அமைப்புகளின் மாண்பை குலைக்கும் வகையில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அரசமைப்புகள், தேர்தல் ஆணையம், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ஊடகங்களை தாக்கி வந்த எதிர்க்கட்சிகள், நீதித்துறை மீதும் தாக்குதலை தொடுப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தின் அடித்தளத்திற்கே இது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணராமல் எதிர்க்கட்சிகள் செயல்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாகத்தான் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல்களில் மக்கள் உரிய பாடம் புகட்டி வருவதாக திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

உலக அளவில் செய்யப்படும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் 46 சதவீதம் இந்தியாவில் செய்யப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் உலகிற்கே இந்தியா வழிகாட்டியாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

ஆதார் அட்டைகளில் விரைவில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

*இதுதொடர்பாக, சமூகவலைதளங்களில் பரப்பப்படும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்று தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இவற்றை பொதுமக்கள் நம்பத் தேவையில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மக்களிடையே தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் இதுபோன்ற தகவல்கள் பரப்பப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<*

*நாடுமுழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.*

*இந்தூர் - Pithampur பொருளாதார வழித்தடத்திற்கான கட்மானப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*இந்த திட்டத்திற்கான முதல்கட்டப் பணிகள் 2 ஆயிரத்து 360 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார்.*

*இந்த திட்டத்திற்காக நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு 60 சதவீத நிலம், வீட்டுமனைகளாக அவர்களுக்கு திருப்பி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*நாட்டிலேயே முதன்முறையாக இந்த முறை செயல்படுத்தப்படுவதாகவும் திரு. மோகன் யாதவ் கூறினார்.*

*>>>>>><<<<<*

*பஞ்சாபில் ஆளும் ஆம் ஆத்மி அரசு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.*

*இதுதொடர்பாக அம்மாநில பிஜேபி தலைவர் திரு. Sunil Jakhar தலைமையிலான பிஜேபி குழுவினர், ஆளுநர் திரு. Gulab Chand Kataria-வை சந்தித்து, புகார் மனுவை சமர்ப்பித்தனர்.*

*அம்மாநில சட்டப்பேரவையின் ஒருநாள் சிறப்புக் கூட்டத்தில், முதலமைச்சர் திரு. Bhagwant Singh Mann, மது அருந்திவிட்டு பங்கேற்றதாகவும் அந்த மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

இதுதொடர்பாக ஆளுநர் விரிவான அறிக்கை கோர வேண்டும் என்றும் பிஜேபி அந்த மனுவில் கோரியுள்ளது.

>>>>>><<<<<

ஜார்க்கண்ட்டில், 36 பேர் கொண்ட அரசியல் விவகாரங்களுக்கான குழுவை காங்கிரஸ் ஏற்படுத்தியுள்ளது.

அம்மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ், இந்த குழு உடனடியாக செயல்பாட்டிற்கு வருவதாக அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

கம்போடியாவுடனான கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்கான இந்திய குழுவினர் அந்நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சி, கம்போடிய விமானப்படை பயிற்சி மையத்தில், நாளை தொடங்கி வரும் 17ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<

மேற்காசியாவில் பதற்றத்தை தணிப்பதற்காக ஈரான் முன்வைத்த புதிய திட்டம் ஏற்புடையதல்ல என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டரம்ப் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அணுஆயுதங்கள் உருவாக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழிகள் இதில் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

பிரான்ஸில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்தனர், 16 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் வடகடலோரப் பகுதியில் 82 பேருடன் சென்று கொண்டிருந்த இந்தப் படகு, எஞ்சின் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 3 பேர் நிலைமை, கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்றும், இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆந்திரா, சத்திஷ்கட், மேற்குவங்கம், சிக்கிம், கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் துரை 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான பயிற்சி ஆட்டங்களில் வெற்றிபெற்ற SWEETY, MUSKAN உட்பட 10 பேர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி வியட்நாமில் வரும் 23ஆம் தேதி தொடங்கி, 31ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான காதுகேளாதோர் கிரிக்கெட் போட்டித் தொடரை இந்தியா வென்றுள்ளது.

*3 டிவென்டி டிவென்டி மற்றும் 2 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா வெற்றிபெற்று, இந்த தொடரை கைப்பற்றியுள்ளது.*

*>>>>>><<<<<*

*IPL கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.*

*>>>>>>END<<<<<*